# Indian Polity Notes Part 4 in Tamil

## 4] ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்

- இந்தியா, அதாவது பாரதம் மாநிலங்களின் ஓர் ஒன்றியமாக இருத்தல் வேண்டும் (சரத்து – 1)
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்திய பரப்பிடம் என்பது, மாநிலங்களின் பரப்பிடங்கள், முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்திய பரப்பிடம் என்பது, மாநிலங்களின் பரப்பிடங்கள், முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மத்திய அரசின் எல்லைகள் (UT) மற்றும் சேர்த்துக் கொள்ளப்படும் மற்ற பரப்பிடங்கள்.
- இந்திய ஒன்றியத்திற்குள் புதிய மாநிலங்களை சேர்த்துக் கொள்ளும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. (சரத்து – 2)
- புதிய மாநிலத்தை உருவாக்கவும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவும் அதிகாரம் படைத்தது நாடாளுமன்றம் (சரத்து – 3)
- இந்திய குடியரசு, 28 மாநிலங்களையும் 8 யூனியன் பிரதேசங்களையும் உடையது.
- புதிய மாநிலத்தை உருவாக்கும் மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பிறகு நாடாளுமன்ற இரு அவைகளில் ஏதேனும் ஒரு அவையில் கொண்டுவரப்படலாம்.
- புதிய மாநிலத்தை உருவாக்கும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவுள்ள மசோதா, அந்த மாநிலத்திற்கு குடியரசுத் தலைவரால் அனுப்ப வேண்டும்.
- அந்த மாநிலம் தங்கள் கருத்துக்களை குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தெரிவிக்கலாம். ஆனால், அந்த கருத்துக்கள் குடியரசுத் தலைவரை கட்டுப்படுத்தாது.

**சரத்து - 4**

- சரத்து 2 அல்லது 3 – ன் படி சட்டம் இயற்றப்பட்டால் (புதிய மாநிலங்களை உருவாக்கினால்) அட்டவணை I மற்றும் IV தானாக திருத்தம் பெறும்,
- இவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திருத்தமாக கருதப்பட மாட்டாது.

**மாநிலங்கள் : 28**

1) ஆந்திரப் பிரதேசம்
2) அருணாச்சல் பிரதேசம்
3) அசாம்
4) பீகார்
5) சத்தீஸ்கர்
6) கோவா

7) குஜராத்
8) அரியானா
9) இமாசலப் பிரதேசம்
10) ஜார்க்கண்ட்
11) கர்நாடகம்
12) கேரளம்
13) மத்தியப் பிரதேசம்
14) மகாராஷ்டிரம்
15) மணிப்பூர்
16) மேகாலயா
17) மிசோரம்
18) நாகாலாந்து
19) ஒரிசா
20) பஞ்சாப்
21) ராஜஸ்தான்
22) சிக்கிம்
23) தமிழ் நாடு
24) தெலுங்கானா
25) திரிபுரா
26) உத்தரப் பிரதேசம்
27) உத்தரகண்ட்
28) மேற்கு வங்காளம்

**யூனியன் பிரதேசங்கள் என்றழைக்கப்படும் ஒன்றிய பகுதிகள்: 8**

1) **அந்தமான் நிக்கோபார் தீவுகள்**
2) **சண்டிகர்**
3) **தாத்ரா மற்றும் நகர் ஹவேலி & தாமன், தியு From 2020 January**
4) **லட்சத்தீவுகள்**
5) **தில்லி**
6) **புதுச்சேரி**
7) **ஜம்மு காஷ்மீர்**
8) **லடாக்**